පාර්ලිමේන්තුවේ විපක්ෂ නායක කාර්යාලය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක 79 වාර්තාව සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග 119(4) ප්‍රකාරව ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලැබූ පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 79 அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை 119(4) இன் பிரகாரம் கௌரவ அமைச்சர் அவர்களின் அவதானிப்புகள் மற்றும் மேற்கொண்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

Office of the Leader of the Opposition of Parliament

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports of Parliamentary Series No. 79 tabled by the Committee on Public Accounts in terms of the Standing Order No. 119 (4).

படிவ இலக்கம் 01

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல : 79

நிறுவனத்தின் பெயர் : பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்

இல	2022 நிதியாண்டுக்கான குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	அடையாளம் காணப்பட்ட / தற்போதைய நிலையின் குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
01.	வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை	தற்போது, வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
02.	நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	தற்போது, ஆண்டின் தொடக்கத்தில் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.
03.	மீளாய்வு ஆண்டுக்குள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரியவாறு நடத்தப்படவில்லை	தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. 2024 ஆம் ஆண்டுக்குள் ஒரு குழுக்கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.
04.	நிறுவனம் பற்றி மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்காக வெப்தளமொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்படவில்லை.	தற்போது வெப்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
05.	நிறுவனத்தால் பராமரிக்கப்படும் வெப்தளம் மூலம் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்ய வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது வெப்தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது, இதன் மூலம் பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகள் மற்றும் பாராட்டுகளை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எவ்வாறாயினும் கடிதங்கள் மூலம் மக்களின் கருத்துக்கள் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.
06.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயங்கள் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது	கணக்குகள் குறித்த சிறந்த அபிப்பிராயத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு தற்பொழுது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இல	2022 நிதியாண்டுக்கான குழுவினால் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	அடையாளம் காணப்பட்ட / தற்போதைய நிலையின் குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
07.	தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில் 50% க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்த பட்சம் 12மணிநேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை.	ஒவ்வொரு ஆண்டும் போதிய பயிற்சி வாய்ப்புகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன
08.	நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் நிலைடபெறுதகு நோக்கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
09.	அடையாளம் காணப்பட்ட நிலையான இலக்குகளை அடைவதற்கான வழிமுறைகள் தீர்மானிக்கப்படவில்லை.	இலக்குகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.
10	நிலையான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துவதற்கான முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை.	குறிகாட்டிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
11	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்தில் நிலவியது.	ஒவ்வொரு ஆண்டும் போதிய பயிற்சி வாய்ப்புகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சனாதிபதி சட்டத்தரணி திசத் டீ.பீ.விஜேகுணவர்தன
எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர்
எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்
இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீஜயவர்தனபுர
கோட்டே.
2024-08-30

Thisath D.B. Wijayagunawardane LL.M
President's Counsel
Secretary to the Leader of the Opposition
Office of the Leader of the Opposition
Parliament of Sri Lanka
Sri Jayewardenepura-Kotte